முருகப்பெருமான் துணை

துறையூர் ஓங்காரக்குடிலாசான் ஆறுமுக அரங்கமகா தேசிக சுவாமிகளுக்கு

**மகான் சுப்ரமணியர் அருளிய ஞான அறிவுரை ஆசி நூல்**

பாகம் : 1321

சுவடி வாசித்தளித்தவர் T. ராஜேந்திரன், M.A., B.Ed.,

ஓம் சரவண ஜோதியே நமோ நம

12.05.2023, வெள்ளிக்கிழமை

1. கர்மவினை போக்க வந்த அரங்கனே
கலியுகத்தைக் காக்க வந்த தேசிகனே
தர்மபலம் ஆக்க வந்த குருராஜனே
தவபலம் எல்லாம் உலகோர்க்கு சித்தியாக
2. ஆகவே என்பால் வரம் பெற்று
அவதாரம் புரிந்த அரங்க மகாஞானியே
வரமென உந்தனுக்கு சுப்ரமணியர் யானும்
வழங்குவேன் ஞான அறிவுரை ஆசி
(சோபகிருது வருடம் சித்திரை மாதம் 29 ம் நாள், 12.05.2023, வெள்ளிக்கிழமை)
3. ஆசியதும் அரங்கன் உன் கரம்பட
அகிலத்தில் தீட்சை பெறும் மக்களுக்கு
வாசியை ஆறுமுகன் யான் நடத்தி
வல்லமைபட இந்த உலகில் ஞானியாக்குவேன்
4. ஆக்கமுடன் அரங்கன் உன் தர்மத்தை
அகிலமெங்கும் பரப்பும் மக்களுக்கு
தேக்கமின்றி பொருளாதார வளமோடு
தெய்வநெறி வழி அவர்களெல்லாம் சிறந்து
5. சிறந்து இனி பிறவாத பேற்றுக்கு
சிறப்பறிவு ஊட்டி காத்தருள்வேன்
மறுப்பின்றி உன் வழி தொடர்வோர்
மண்ணுலகில் ஞானிகளாவது உறுதியப்பா
6. பொறுப்புடன் உன் தர்மத்தை ஏற்று
பூவுலகமெல்லாம் புண்ணியமாக்குபவரெல்லாம்
எல்லோரும் என் ஆசிபெற இந்த உலகில்
எல்லாவரமும் பெற்று சிறக்க நேரும்

7. சிறப்புடன் அரங்கன் சக்திக்குள்
சித்தியாகி யான் கலந்திருக்க
மறுப்பின்றி அரங்கனை நித்தம் காணும் மக்களுக்கு
மரணமில்லை இனி மறுமை இல்லை
ஞான அறிவுரை ஆசி முற்றே

–சுபம்–